எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்கள் ஆகியவற்றைத் தூர்வாருவதற்கும், செப்பனிடுவதற்கும் ஓர் ஆய்வு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 83, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

83—

கோதுமை வழங்குதல்

***6404—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கோதுமை எத்தனை டன்?

(ஆ) குடும்ப அட்டைதாரர்களுக்குக் கோதுமை என்ன விலைக்கு விற்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) பொது விநியோகத் திட்டத்திற்காக மத்திய தொகுப்பிலிருந்து இம்மாநிலத்திற்கு 1–7–2002 முதல் மாதந்தோறும் 10,000 டன்கள் கோதுமை, வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான விலையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. தற்போதைய நிலையில், மாத நுகர்வின் அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்திற்காக 5,000 டன்கள் வரையில் கோதுமை எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

(ஆ) நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ கோதுமை 7 ரூபாய், 50 பைசா என்ற விலையில் 24–7–2002 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.